செ.வெ.எண்: 217 **பத்திரிக்கைசெய்தி** நாள்: 21/03/2017

வேலை பழகுநர் திட்டத்தின்கீழ், திறமை மிகுந்த பயிற்சியாளர்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. தொழிற்பழகுநர் சட்டம் 1961-ன்கீழ் தொழிற்பழகுநர் பயிற்சிபெற்றுவரும் பயிற்சியாளர்களின் சேர்க்கை விழுக்காடு விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாக்குமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகவும் குறைவாக உள்ளது. எனவே இந்த நான்கு மாவட்டங்களிலும் தொழிற்பழகுநர் பயிற்சியை மேம்படுத்த மாநிலஅரசு ஐடிஐ அப்ரண்டிஸ் பயிற்சி சேர்க்கை முகாம் 2016-17 நடத்த திட்டமிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் திருநெல்வேலி மண்டலத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், பேட்டை, திருநெல்வேலியில் வைத்து 24.03.2017 காலை 9 மணிமுதல் ஐடிஐ அப்ரண்டிஸ் பயிற்சி சேர்க்கை முகாம் நடைபெறவுள்ளது. இந்த தொழிற்பழகுநர் சேர்க்கை முகாமில், இதற்கு முந்தைய வருடங்களில் ஐடிஐ பயின்று அனைத்து பாடங்களிலும் தேர்ச்சிபெற்று, இதுவரை ஐடிஐ அப்ரண்டிஸ் பயிற்சி பெறாத (Apprentice) பயிற்சியாளர்கள் மற்றும், தொழிற் பள்ளிகளில் பயின்று தேர்ச்சி பெற்றுள்ள பயிற்சியாளர்கள் உரிய அசல் சான்றிதழ்களுடன், இந்த ஐடிஐ அப்ரண்டிஸ் சேர்க்கை முகாமில் தவறாது கலந்துகொண்டு, பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

20.3.17

மாவட்ட ஆட்சித்தலைவர்

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்